# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 47

அநீதிக்கு எதிரான நீதியின் குரல்!
அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு
குறித்த வரலாற்றைப் பேசும்
எல்லோருக்கும் எல்லாம்!

ஓவியம் : ரவி பேலட்



# விவசாயம் செய்தல் பிராமணருக்கு இழுக்கு!

*1871-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் படி, சென்னை மாகாணத்தின் ஒட்டுமொத்த பிராமணர்களின் எண்ணிக்கை 10 லட்சத்து 95 ஆயிரத்து 445. அவர்களில் 5 லட்சத்து 47 ஆயிரத்து 27 பேர் ஆண்கள். 5 லட்சத்து 48 ஆயிரத்து 418 பேர் பெண்கள். ஒட்டுமொத்த மக்கள்தொகையில் 3.7 சதவிகிதத்தினர் பிராமணர்கள். பிராமணர்கள் இந்து மதத்தின் பிரிவுகளான 'வைணவம்', 'சைவம்' ஆகியவற்றில் மட்டுமல்ல. 'லிங்காயத்', 'ரோமன்' 'கத்தோலிக்', 'புரோட்டஸ்டன்ட்' உள்ளிட்ட மதங்களிலும் பரவியிருந்தனர்.*

*மனுவின் சட்டப்படி, பிராமணர்கள், 'யக்ஞம்' (பூஜை, சடங்குகள் செய்தல்), 'யோஜ்னம்' (பூஜை, சடங்குகளுக்கு உதவுதல்), 'அத்தியாயனம்' (வேதம் படித்தல்), 'அத்தியாபனம்' (வேதம் கற்பித்தல்), 'தானம்' (பரிசு வழங்குதல்), 'பிரதிகிரகம்' (தானம் பெற்றுக்கொள்ளுதல்) ஆகிய ஆறுவகையிலான வேலைகளைச் செய்யவேண்டும். ஆனால், 1871-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, 5 லட்சத்து 47 ஆயிரத்து 27 பிராமணஆண்களில் 3 லட்சத்து 38 ஆயிரத்து 934 ஆண்கள், அதாவது ஒட்டுமொத்தப் பிராமண ஆண்களில் 61.4 சதவிகிதத்தினர், அரசு வேலை, வணிகம், நிலவுடைமையாளர், தொழில்துறை உள்ளிட்ட துறைகளில் பரவியிருந்தனர். 24.2 சதவிகிதம் பிராமணர்கள் நிலவுடைமையாளர்களாக இருந்தாலும், அவர்கள் நிலத்தில் இறங்கி விவசாயம் செய்யவில்லை.*

*பிராமணர்கள் நிலத்தில் இறங்கி, சொந்தமாக உழுவதையும், ஏனைய விவசாய வேலைகளைத் தங்கள் கைகளால் செய்வதையும், கண்ணியக் குறைவானதாகக் கருதினர். தங்களுக்கு ஏற்படும் இழிவெனக் கருதினர். விவசாயத்தில் அவர்களுடைய அதிகபட்ச ஈடுபாடு என்பது, தம் நிலத்தில் வேலைசெய்யும் வேலைக்காரர்களுக்கு உத்தரவிடுவது, குத்தகைதாரர்களை ஏற்பாடு செய்தல், விவசாய உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றுடன் முடிந்துவிடுகிறது.*

*உழுவதற்கும், ஏனைய விவசாய வேலைகளைச் செய்வதற்கும் சூத்திர சாதியினரை வேலைக்கு அமர்த்தியிருந்தனர். பிராமணர்கள் நிலவுடைமையாளர்களாக இருந்தாலும், அந்நிலங்கள் இதற்கு முந்தைய காலங்களில் மன்னர்களால் அளிக்கப்பட்டவை. ஆரம்ப காலங்களில் வேதம் பயிற்றுவிப்போராகவும், பூஜை செய்வோராகவும், பிச்சை எடுப்போராகவும் இருந்த பிராமணர்கள், மன்னர்களால் தானமாக அளிக்கப்பட்ட நிலத்தின் உதவியுடன் நிலவுடைமையாளர்களாக மாறினர். ஆங்கிலேயர் ஆட்சியிலும் நிலவுடைமை தொடர்ந்தது. கூடுதலாக கல்வி, அரசு வேலை மூலம் அதிகாரம் பெற்றனர்.*

## வாய்ப்பைப் பயன்படுத்தியவர்கள்

*'கோவர்' எனும் ஆங்கிலேய அதிகாரி அரசுக்கு அளித்திருந்த கல்வி அறிக்கையில் "சமூக அளவில் உயர்நிலையில் உள்ள சாதியினரின் கல்விநிலை சிறப்பாக இருக்கிறது. ஏனெனில், கல்விக் கூடங்களுக்குள் நுழையத் தேவையான தேர்வுகளில் அவர்களால் மட்டுமே வெற்றிபெற முடிகிறது. அரசு வேலைவாய்ப்பு என்பது, ஒரு மனிதன் பெறக்கூடிய மிகவும் மதிப்புமிக்க வேலையாக அமைந்துள்ளது. அரசு வேலை பெறுகிறவர்கள், சமூகத்தில் உயர்ந்த இடம் பிடிக்கிறார்கள். ஆகவே, ஆங்கில அறிவு, சென்னை மாகாண இந்துக்கள் மத்தியில் பொது மரியாதையாகவும், தனிப்பட்ட மரியாதையாகவும் அமைந்துள்ளது" என்று குறிப்பிட்டிருந்தார்.*

*1857-58-ஆம் ஆண்டு முதல் 1872-1873 ஆம் ஆண்டு வரையிலான 15 ஆண்டு காலத்தில் பல்கலைக்கழகம் சென்று, உயர்கல்வி கற்றோர் எண்ணிக்கையில் பிராமணர்கள் (2,058), பிராமணரல்லாதார்கள் (856), ஐரோப்பியர் (424), இந்தியக் கிறிஸ்தவர்கள் (291), முஸ்லிம்கள் (61) என்ற அளவில் இருந்தனர். 1858-இல் 16 பிராமணர்கள் மட்டுமே பல்கலைக்கழகத்தில் இளநிலைக் கல்வி முடித்தனர். அந்த எண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்து 1872-இல் 354 என்ற அளவுக்கு உயர்ந்தது. அவர்களை ஒப்பிடுகையில், பிராமணரல்லாதோர் 1858-இல் 7, 1872-இல் 144 பேர் மட்டுமே இளநிலைப் பட்டம் முடித்தனர். ஒரு லட்சத்துக்கு 15 பிராமணரல்லாதாரும், 16 முஸ்லிம்களும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இளநிலைப் பட்டம் முடித்திருந்தனர். ஆனால், பிராமணர்களில் 875 பேர் பட்டம் பெற்றிருந்தனர். பிராமணர்களோடு ஒப்பிடுகையில் 8,000-க்கும் அதிகமான பிராமணரல்லாதவர்கள் இளநிலைப் பட்டம் பெற்றிருக்கவேண்டும். ஆனால், வெறும் 15 பேர் மட்டுமே பட்டம் பெற்றிருந்தனர்.*

**இவர்கள் பிராமணிய இந்துக்கள் அல்ல என்பது என் கருத்து. ஏனென்றால், ஆரியர்கள் அறியப்படாததற்கு முன்னரே இம்மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர்.**

*ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் சமூகத்தின் உயரடுக்கில் இருந்த பிராமணர்கள் ஆங்கில அரசு பொதுக்கல்வி முறையை அறிமுகப்படுத்தியவுடன், உடனே அங்கும் ஓடிச்சென்று இடம்பிடித்துக் கொண்டனர். பெற்ற கல்வியைப் பயன்படுத்தி, அரசு வேலைகளுக்கும் சென்றனர். பிராமணரல்லாத சாதியினர் கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதில் கவனமும் அக்கறையும் இல்லாதிருந்தனர். சென்னை போன்ற பெருநகரத்தில் வாழ்ந்தோர், பெரும் பணக்காரர்கள் உள்ளிட்டோர் தவிர்த்து, ஏனைய பிராமணரல்லாதார் கல்வி கற்பதில் ஆர்வம் செலுத்தவில்லை.*

*அதே வேளையில், 1858-க்கும் 1872-க்கும் இடைப்பட்ட 15 ஆண்டு காலத்தில் சென்னை மாகாணக் கிறிஸ்தவர்களில் ஒரு லட்சத்துக்கு 298 பேர் சென்னை பல்கலைக்கழகத்தில் இளநிலைப் பட்டம் பெற்றிருந்தனர். மக்கள்தொகையில் 60-க்கு 1 என்ற விகிதத்தில் இருந்த சென்னை மாகாணக் கிறிஸ்தவர்கள், 26-க்கு 1 என்ற விகிதத்தில் இருந்த பிராமணர்களைக் காட்டிலும் குறைவான அளவில் கல்வி பெற்றிருந்தனர் என்றபோதிலும், பிராமணரல்லாதார்களைக் காட்டிலும் 26 மடங்கு அதிகம். அனைத்து சென்னை மாகாணக் கிறிஸ்தவர்களும் சூத்திர, பஞ்சம சாதிகளில் இருந்து மதம் மாறியவர்கள். மதம் மாறியதற்கு அவர்களுக்குக் கிடைத்த உடனடிப் பலன் கல்வி முன்னேற்றம்.*

## கட்டுக்கதைப் பெருமைகள்

*இப்படி அனைத்திலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திய சாதியினர் ஒரு புறம். மறுபுறம் தங்கள் சாதிப் பெருமையை உயர்த்துவதைத் தவிர, வேறு எந்தப் பொருளும் இல்லாமல் இலக்கியங்களை உருவாக்கினர் அல்லது அப்படிப்பட்ட இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றை நம்பினர். உதாரணத்திற்கு, 'திருநெல்வேலி சாணார்கள்' எனும் நூலில் இராபர்ட் கால்டுவெல் 'சாணார்கள் தாங்கள் பெருமைமிக்க ஆண்டசாதிகளின் வீரமிக்க வழித்தோன்றல்கள் என்பதை நிரூபிக்க முயன்றனர்' என்று குறிப்பிடுகிறார். மேலும், அவர்கள் இம்மண்ணின் உண்மையான ஆண்ட பரம்பரை மட்டுமின்றி, 'ஆரிய சத்திரியர்களின் வழித்தோன்றல்கள்' என்றும் நிறுவ முயன்றனர்.*

*அவ்வாறு நிறுவுவதற்காக 'சாணார்கள்' பிராமணிய புராணங்களில் கூறப்பட்டுள்ள கடவுள்களில் மிகவும் பிரபலமான சிலவற்றை பெயரளவில் தமது தெய்வங்களாக ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால், அக்கடவுள்களைப் பற்றியப் பெயர்கள், பொதுவில் புழங்கும் கட்டுக்கதைகள் தவிர்த்து, வேறு எதுவும் அவர்களுக்குத் தெரியாது' என்கிறார் கால்டுவெல்.*

*'தங்களை ஆரிய ஷத்திரியர்களின் வழித்தோன்றல்கள் என திருநெல்வேலி சாணார்கள் கூறிக்கொண்டாலும், அவர்கள் உள்ளிட்ட தென்னிந்தியத் தமிழர்கள் இந்துக்கள் இல்லை' என்று கால்டுவெல் தன்னுடைய 'திருநெல்வேலி சரித்திரம்' நூலில் பின்வருமாறு கூறுகிறார்:*

*"அறியாமை கொண்ட பழங்கால மக்கள் கிராமங்களில் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களின் 'தாழிகள்' அங்கொன்றும் இங்கொன்றுமாக இல்லாமல் அதிக அளவில் நெருக்கமாக இடுகாடுபோல் கிடைத்துள்ளன. இப்பகுதியில் கிடைத்துள்ள மட்பாண்டங்களையும் இரும்புக் கருவிகளையும் ஆயுதங்களையும் காணும் போது, இங்கு வாழ்ந்த மக்கள் நாகரிகம் மிக்கவர்கள் என்ற முடிவுக்கு வரலாம். இன்று, இதன் சுற்று வட்டாரத்தில் வாழ்கின்ற மக்களைப் போன்றே அன்றைய மக்களும் அங்கு வாழ்ந்திருக்கின்றனர்.*

*இம்மக்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் மறைந்தார்கள்? என்ற ஐயங்களுக்கு இன்னும் முடிவில்லை. இவர்கள் பிராமணிய இந்துக்கள் அல்ல என்பது என் கருத்து. ஏனென்றால், ஆரியர்கள் அறியப்படாததற்கு முன்னரே இம்மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். இதனால், இத்தாழிகள் கிறிஸ்தவ வரலாற்றைவிட பழமையானவை என்ற கருத்தினைக் கொள்ள முடிகின்றது."*

*ஆரியர்கள் அறியப்படாததற்கு முன்பே, இப்பகுதியில் இருந்த மக்கள் கீழ்நிலைக்கு வீழ்ந்தது ஏன்? கீழ்நிலையில் நீண்ட காலம் தொடரலாமா? விடலாமா?*

**...குரல் ஒலிக்கும்**

## மக்கள் கலைஞனைக் கொண்டாடும் 'மருதோவியம்'!



**ச**மூகநீதி, சமத்துவத்துக்குக் குரல் கொடுக்கும் கலைஞர்களில் குறிப்பிடத் தக்கவர் ஓவியர் ட்ராட்ஸ்கி மருது. நவீன ஓவியங்களை வெகுமக்கள் தளத்துக்குக் கொண்டு சென்றதில், இவரது பங்கு முக்கியமானது. திரைப்படங்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள், நவீன ஓவியங்கள் எனப் பல தளங்களில் பணியாற்றிக் கொண்டிருப்பவர். குறிப்பாக, தனது படைப்புகள் வழி, திராவிடக் கலை அடையாளத்தைப் பிரதிபலிப்பவர்.

அத்தகைய சிறப்புக்குரிய மகத்தான கலைஞர் ட்ராட்ஸ்கி மருதுவைக் கொண்டாடும் 'மருதோவியம்' என்ற நிகழ்ச்சியை, 'வையம்' இதழ் ஏற்பாடு செய்துள்ளது. சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கில், இன்று முழுநாள் நிகழ்ச்சியாக இந்நிகழ்வு நடைபெறுகிறது.

ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும், இந்நிகழ்ச்சியில் வி.சி.க. தலைவர் தொல்.திருமாவளவன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சி.மகேந்திரன், ஊடகவியலாளர்கள் நக்கீரன் கோபால், திருமாவேலன், குணசேகரன், இயக்குனர் கரு.பழனியப்பன் உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகள் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். ட்ராட்ஸ்கி மருது குறித்த ஆவணப்படம் திரையிடல், நூல்கள் வெளியிடுதல் உள்ளிட்ட நிகழ்வுகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

மக்கள் கலைஞனைக் கொண்டாடி மகிழ, அரியதோர் வாய்ப்பு. வாய்ப்புள்ளோர் செல்க!

## ஃப்ளாஷ்பேக்



### முத்தமிழறிஞருடன் முத்தான சந்திப்பு!



கவிஸ்ரீ.தினேஷ்

2012-ஆம் ஆண்டு ஜனவரி 17-ஆம் தேதி, முத்தமிழ்ப் பேரவையின் 34-வது ஆண்டு விழா, அடையார், திருவாவடுதுறை ராஜரத்தினம் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அருகில் உள்ள சட்டப் பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்த மாணவனாகிய நான், தமிழன்னை யின் தவப்புதல்வரைச் சந்திக்க வேண்டுமென்று காத்திருந்து, விழா முடிந்ததும், மேடைக்குச் சென்று தானைத் தலைவரை வணங்கி, வாழ்த்துப் பெற்று வந்தேன். வாழ்வில் மறக்க முடியாத மணித்துளிகள் அவை.

**-கவிஸ்ரீ.தினேஷ்,**
**மாவட்டத் துணை அமைப்பாளர்,**
**தி.மு.க. வழக்கறிஞர் அணி,**
**மதுரை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### சிறைச்சாலைச் சீர்திருத்தம்!

1967-ஆம் ஆண்டு, கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், சிறைச்சாலைகளைச் சீர்திருத்தம் செய்வதில் கவனம் செலுத்தியது. சிறைச்சாலைகளில் 'சி' வகுப்புக் கைதிகள் சொந்த செலவில் சோப்பு, எண்ணெய், பற்பசை ஆகியவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். 'சி' வகுப்புக் கைதிகளுக்குக் கடிதப் போக்குவரத்து, பார்வையாளர் அனுமதி ஆகியவை அளிக்கப்பட்டன. 'ஏ' மற்றும் 'பி' வகுப்புக் கைதிகளுக்கு செய்தித்தாள்கள் அனுமதிக்கப்பட்டன. இதனால், கைதிகளிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட்டன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

733

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131